[1980 பிப்ரவரி 11

இணைப்பு VIII.

[199 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 246-க்கான விடையைக் காண்க].

1976-ஆம் ஆண்டு செப்டம்பரில் மாநிலத்தில் பல இடங்களில் குறிப்பாக சென்னை நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள திரையரங்குகள் ஒரு காட்சியில் இரண்டு முழு நீள திரைப்படங்கள் காணபிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1976 ஆம் ஆண்டு டிசம்பரில், தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குப் படுத்தல்) விதிகளை கண்டிப்பாக அமுல்படுத்தி, இது போன்ற இரண்டு திரைப்படங்களை ஒரே காட்சியில் திரையிடும் பழக்கத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சென்னை காவல்துறை ஆணையருக்கும் ஆணையிடப்பட்டு, அவர்களும் தங்கள் மாவட்டத்திலுள்ள எல்லா திரையரங்கு உரிமதாரர்களையும் இவ்வழக்கத்தை உடன் நிறுத்துமாறு எச்சரித்துள்ளனர்.

சமீபத்தில் கடந்த ஆண்டு டிசம்பரில், மீண்டும், மேற்கண்ட கடுமையான உத்தரவுகளுக்கு பின்னும், ஒரே காட்சியில் இரண்டு முழு நீளத் திரைப்படங்கள் காண்பிக்கின்றனர் என்று அரசுக்குப் புகார்கள் வந்தது. 1—2—1979-ல் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னைக் காவல் துறை ஆணையரும், இவ்வாறு இரண்டு படங்கள் திரையிடும் பழக்கம் கடுமையான நடவடிக்கைகள் மூலம் தடை செய்யப்படுவதுடன் இதுபோன்ற புகார்கள் மீண்டும் அரசுக்கு வராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS